263—

பேருந்து வசதி

***22436—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சலிலிருந்து சென்னைக்கு குளிர்சாதனப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சலிலிருந்து சென்னைக்கு 19-6-2012 முதல் அதிநவீன சொகுசு மிதவைப் பேருந்து மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க இயக்கப்பட்டு வருகிறது. அந்தப் பேருந்தின் மொத்த இருக்கையில் தற்போது 69 சதவிகிதப் பயணிகள் மட்டுமே பயணம் செய்து வருகின்றனர். பயணிகளின் எண்ணிக்கை வரும் ஆண்டுகளில் அதிகரிக்கும்பட்சத்தில், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவு பெற்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் எல்லா வகைகளிலும் முன்னேறிக்கொண்டிருக்கக்கூடிய இந்தக் காலக்கட்டத்தில், அனைத்திலும் நவீனம் இருந்தும், பேருந்து இயக்கத்திலே நவீனம் இல்லை என்ற சங்கடமான விஷயத்தை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்று நம்முடைய மாநிலத்திலே அதிநவீன வசதிகளுடன் தனியார் பேருந்துகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன.* Multi axle *பேருந்துகள்,* AC Coach-*கள் மிகச் சிறப்பாக இயங்கிக்கொண்டிருக்கிற காரணத்தால், பயணிகள் அவற்றையே பயன்படுத்திக்கொள்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தமட்டில், பல்வேறு முக்கிய நகரங்களிலிருந்து*

2013 ஏப்ரல் 18]

வெளி மாநிலங்களுக்கும், தமிழகத்திலே சென்னைப் பகுதிக்கும் வாகனங்கள் இயங்கிக்கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையிலே நம்முடைய அரசுப் பேருந்துகள் சரியான நேரப்படி இயங்கவில்லை; நவீனப்படுத்தப்படவில்லை; ஆகவே, பயணிகள் அதிகமாக அவற்றைப் பயன்படுத்தவில்லை என்பது உண்மை. அதுமட்டுமல்ல, நம்முடைய பேருந்துகளை 70 கிலோ மீட்டர் ஸ்பீடில்தான் ஓட்டுகிறோம். அதனால், நாம் குறிப்பிட்ட நேரத்திற்குள் செல்ல முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியைக் கேளுங்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: ஆகவே, ஸ்பீடை அதிகப்படுத்த வேண்டும்;. சிறப்பான முறையிலே பேருந்தை இயக்க வேண்டும்; நவீனப்படுத்த வேண்டும். அப்படி நவீனப்படுத்தப்பட்ட பேருந்துகளை இயக்குகின்றபோது, நிச்சயமாக அதிக அளவில் பயணிகள் பயன்பெறக்கூடிய சூழ்நிலை ஏற்படும். முன்னாள் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய காலக்கட்டத்திலே, அரசுப் பேருந்துகள் முதன்மை நிலையில் இருந்தன. தனியார் பேருந்துகள் எல்லாம் ஒதுக்கப்பட்டிருந்தன. அப்படிப்பட்ட சூழ்நிலையை இந்த ஆட்சியாளர்கள் கொண்டு வர வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதிய பேருந்துகளை நவீன முறையில் இயக்க வேண்டும் என்றும், அதனை நீங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். குளச்சலிலிருந்து சென்னைக்கு ஏசி பஸ் இயக்க முன்வர வேண்டும் என்றும், அதுபோல தமிழகத்திலுள்ள முக்கிய நகரங்களிலிருந்து புதிய, நவீன பேருந்துகள் இயக்க முன்வர வேண்டும் என்றும் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருடைய குளச்சல் தொகுதியில் மட்டும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்று, இந்த 23 மாத ஆட்சிக் காலத்தில், 11 புதிய வழித் தடங்களில் குளச்சல் தொகுதி மக்கள் பயன்படக்கூடிய வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய

உத்தரவினைப் பெற்று, புதிய பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. அதுமட்டுமல்ல, அனைத்து மாவட்டங்களினுடைய தலைநகரங்களிலிருந்தும் சென்னைக்கு மக்கள் வசதியாக வந்து செல்ல குளிர்சாதனப் பேருந்துகள் இயக்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கை எடுத்து, முதற்கட்டமாக, கோயம்புத்தூர் மற்றும் மதுரையிலிருந்து குளிர்சாதனப் பேருந்துகளை இயக்குவதற்குண்டான பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-20

வெளியூரிலிருந்து சென்னைக்கு வந்து செல்லக்கூடிய பயணிகள் வசதியாக வந்து செல்ல வேண்டும் என்பதற்காக அனைத்து விரைவுப் போக்குவரத்துக் கழகங்களிலிருந்து இயக்கப்படும் பேருந்துகளை நவீன வசதிகள் கொண்ட, Push back இருக்கைகள் கொண்ட, Ultra Deluxe பேருந்துகளாக, மாற்ற வேண்டுமென்ற மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவு பெற்று, இன்று Ultra Deluxe பேருந்துகள் மக்களுடைய பயன்பாட்டிற்கு இயக்கப்பட்டு வருகின்றன. அந்தப் பேருந்துகள் அதி நவீன வசதிகள் கொண்டவையாக இருக்கவேண்டுமென்று சொன்னதன் அடிப்படையில், 49 இருக்கைகள் கொண்ட அந்த Ultra Deluxe பேருந்துகளின் இருக்கைகளை, 43 ஆகக் குறைத்து, பயணிகளின் இருக்கை எண்ணிக்கைக்கேற்ப வசதிகள் செய்து, சௌகரியமாக இருக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டு, அதன்படி இன்று விரைவுப் போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு எடுத்துச்சொல்லி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கின்ற கோரிக்கை, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

2013 ஏப்ரல் 18]

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் ஒரு முக்கியமான வளர்ந்துவரும் நகரம் என்ற காரணத்தினால், அதிகமான பேருந்துகள் தேவை. அதிகமான பேருந்துகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னுடைய பகுதிக்குத் தந்தார்கள். அதற்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குளச்சலிலிருந்து மீனவர்கள் அதிகமாக கேரளாவிற்கு மீன் பிடிக்கச் செல்கின்றார்கள். மீன் பிடித் தொழில் செய்யும் மீனவர்களின் வசதிக்காக குளச்சலிலிருந்து கேரளா மாநிலத்தில் உள்ள எர்ணாகுளத்திற்கு நவீன பேருந்துகளை இயக்கவும், என் தொகுதிக்குட்பட்ட கோழிபோர் பகுதியிலிருந்து நாகர்கோவிலுக்கு ஒரு பேருந்து இயக்கவும், முட்டம், ஜேம்ஸ் நகரிலிருந்து நாகர்கோவிலுக்கு ஒரு பேருந்து இயக்கவும், மணவாளக்குறிச்சியிலிருந்து கேரளா எல்லை, தமிழக பார்டரில் உள்ள களியக்காவிளைக்கு ஒரு பேருந்து இயக்கவும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தனியார் பேருந்துகளுக்கு இணையாக அரசுப் பேருந்துகளிலும் வசதிகள் செய்யப்பட வேண்டும் என்று முன்பு ஒரு கேள்வியில் கேட்டிருந்தார். தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகை தினங்களில் தனியார் பேருந்துகளைவிட, அரசுப் பேருந்துகள் மீது நம்பிக்கை வைத்திருந்ததன் காரணமாகவும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்திருக்கின்ற சீரிய நடவடிக்கையின் காரணமாகவும் (மேசையைத் தட்டும் ஒலி) சென்னை கோயம்பேடு பேருந்து நிலையத்திற்கு பேருந்தில் செல்ல வந்த பயணிகள் ஒருவர்கூட, எங்களுக்கு பேருந்து வசதியில்லை என்று திரும்பிச் சென்ற வரலாறு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எத்தனை பயணிகள் சென்னை கோயம்பேடு பேருந்து நிலையத்திற்கு வந்தார்களோ, அத்தனை பயணிகளுக்கும் சிறப்புப் பேருந்துகளை இயக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டு, அந்தப் பேருந்துகள்மூலம் மக்கள் சொந்த ஊருக்குச் சென்று வந்தார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்த வழித்தடங்களில், துறையின் சார்பாக ஆய்வு செய்யப்பட்டு, பயணிகளுடைய எண்ணிக்கைக்கேற்ப மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 264, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

264—

மாணவர் விடுதி

***27895—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அந்தியூர் தொகுதி, பர்கூர் மலைக் கிராமத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மாணவர் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

அந்தியூர் தொகுதி, பர்கூர் மலைக் கிராமத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை சார்பில் மாணவர் விடுதி